உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடோர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிச்சயம்.


| மலர் 2 | சுபானு௵ ஐப்பசி௴ NOVEMBER 1943 | இதழ் 12 |
|---|---|---|


இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.

8 C

உள்ளுறை


சிவபோகசாரம்— 354

சைவத்திருமுறைகள்—
தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான்,
திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள், தமிழாசிரியர், சென்னை. 356

கந்தரலங்காரப் பொருட் சிறப்பு—
திரு. S. சிவபாதசுந்தரம், B. A., அவர்கள், யாழ்ப்பாணம். 362

அப்பர் தேவாரத்திற்கண்ட திருவிளையாடற் பகுதி—
திரு. வேலாயுத ஓதுவார் அவர்கள், தருமபுர ஆதீனப் பாடசாலைத் தேவார ஆசிரியர். 366

5. **Tiruneelakanta Nayanar—**

Kazhi Siva. Kannuswami Pillai, B. A.,
Dharmapuram-Adhina-Vidwan. 370

---

# தருமபுர ஆதீன வெளியீடுகளின்

# விலைப்பட்டி

| | | விலை. | அஞ்சற் செலவு. |
|---|---|---|---|
| | | அ. பை. | அ. பை. |
| 39 | புள்ளிருக்கு வேளூர்ப் புராணம் | 8—0 | 3—0 |
| 40 | சித்தாந்த சைவ விளுவிடை | 3—6 | 1—9 |
| 41 | நால்வர் சரித்திரமும், அற்புதத் தேவாரத்திரட்டும் | 2—0 | 1—3 |
| 42 | ஆச்சாள்புரம் கோயில் வரலாறு | 1—6 | 0—9 |
| 43 | திருவையாற்றுக் கோயில் வரலாறு | 2—6 | 0—9 |
| 48 | திருக்கடவூருலா (குறிப்புரையுடன்) | 4—0 | 1—9 |
| 51 | சீகாழித் தலவரலாறு | 2—9 | 0—9 |
| 52 | மெய்கண்ட சாத்திரம் | 8—0 | 3—0 |
| 53 | திருக்கற்குடித் தலவரலாறு | 2—0 | 0—9 |
| 54 | நீதிநெறிவிளக்கம் | 8—0 | 4—3 |
| 55 | திருவாரூர் நான்மணிமாலை | 2—0 | 1—0 |
| 56 | சகலகலாவல்லி மாலை | 1—0 | 0—9 |
| 57 | கந்தரனுபூதி | 0—6 | 0—9 |

இப்புத்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட முகவரிக்கு முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். எல்லோரும் எளிதில் பெற்றுப் படித்துணரவேண்டுமென்ற கருத்தில் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுவதால் மணியார்டர் மூலமாவது, தபாற்றலைகள் மூலமாவது அஞ்சற்கூலி உள்பட அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

முகவரி:— நூல்நிலையப் பரிசோதகர்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயவரம் P. O.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளி நலங்கிளர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் புதுமலர்க் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்.

---

## சிவபோகசாரம்

சிவபோகசாரம் என்னும் உண்மை ஞானத்தின் பயனாகிய இவ்வனுபவ நூலைச் செய்தருளியவர்கள் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து ஆதி குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் குருஞான சம்பந்த சுவாமிகளாவர். இந்நூலின் கருத்துக்கள் மெய்கண்ட சாத்திரம் பதினான்கின் முடிபும் பயனுமா யுள்ளது. சிவபோகத்தின் சாரம் என இந்நூல் பெயர் பெற்றதிலேயே இதன் மாட்சி நன்கு விளங்குகின்றது என்னலாம். அன்றி, இச்சிவபோக சாரம் என்னும் நூலில் உள்ள ஒரு வெண்பாவின் கருத்தைப் பற்றிச் சிறிதாராய்வாம்.

ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகள் நமது சைவ சமயிகட்கெல்லாம் ஓர் நன்னெறி உபதேசித்தருளி யுள்ளார்கள். அந்நெறியினை மனத்திற் கறிவுறுத்தி யருளும் முறையிலுள்ளது அச்செய்யுள்.

ஆசையறுப் பாசம்விடாய் யானசிவ பூசைபண்ணுப்
நேசமுடன் அஞ்செழுத்தை நீநினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைக ளோதாய்
மனமே உனக் கென்ன வாய்.

என்பதாம்.

ஏ மனமே! வருவது தானேவருமென நினைந்து, எப் பொருளைக் கண்டவிடத்தும் அவாவுறுகின்றதன்மை உனக்கு ஒழிதல் வேண்டும். அன்றியும், அனுபவித்த பொருள்களைப் பற்றி விடாது நிற்கும் பாசத்தை விட்டொழித்தல் வேண்டும். பயன் தருவதான சிவ பூசையைத் விடாது செய்தல் வேண்டும். உள்ளன் போடு பஞ்சாக்கரத்தை உள்குதல் வேண்டும். யாவரும் வெறுக்கத்தக்கதான கோபத்தை அறவே விட்டொழித்தல் வேண்டும். இவ்வகையாக செம்மை யடைந்தபின்னர், திருமுறைகளை ஓதுதல் வேண்டும். மேற்கூறிய செயல்களை நீ செய்யாது வறிதே பேரின்பம் பெற விரும்பும் மனமே நினக்கென்ன பேச்சிருக்கின்றது—என்பது இப்பாடலின் பொரு ளாகும்.

அவாவறுத்தல் ஆன்மாவிற்கு வேண்டப்படுவ தோர் இன்றியமையாததாம் என்பதை, "ஆராவியற்கை அவாநீப்பின் அந்நிலையே பேராவியற்கை தரும்" என்னும் திருக்குறள் வாக்காலும் அறிக.

அன்றியும் நிலையுதலில்லாத அனுபவப் பொருள் களில் உள்ளம் விடாது பற்றுமானல் மெய்யுணர்வு விளையாது, ஆதலால் பாசம் விடுதல் வேண்டும் என்றூர்கள், சிவபூசை சைவசமயிகட்கு ஒரு தலையாய் வேண்டப்படும் ஒன்றேயாம் என்பதை "எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும் உண்மையாவது பூசனை" என்னும் பெரியபுராணத்தாலறிக.

அஞ்செழுத்தை நேசமொடு ஓதுதல் வேண்டும் என்பதையும் ஓதாதார் உள்ளம் இருளாமென்பதையும், "அஞ்செழுத்தை உணரார் அறிவிலோர் நெஞ்சு மென்ன இருண்டது நீண்டவான்" எனவும், "வஞ்சக மற்றடி வாழ்த்தவந்த கூற்று அஞ்ச உதைத்தன அஞ் செழுத்துமே" எனவும் வரும் திருவாக்குகளால் அறிக.

திருமுறைகளை உண்மையன்புடன், ஓதுவார்க்கு மும்மை இன்பமும் நிரலே கிடைக்கும் என்பதை

"முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்தும் இவை வல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலஅடைந்தார் புண்ணியரே"

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்காலும் உணரலாம். இவ்வெண்பாவின் கருத்தைப் போலவே முப்பொருளின் உண்மைகளையும், அநேக நீதிகளை யும், நிலையாமை முதலியவற்றையுங் கூறும் பெருங் கருத்துடையது இந்நூலெனலாம்.

---

சமயம், விசேடம், நிருவாணமென்ற மூவகைத் தீக்கை களுள், சமயம் மந்திரத்திற்கும், விசேடம் பூசனைக்கும், யோகத் திற்கும் தகுதிதருவன. நிருவாணதீக்கை, ஆறத்துவாவின் சுத்தியால், மேலான அபரமுத்தி பரமுத்திகளை உயிர் பெறுதற் குரிய தகுதியைத் தரும். கிரியையென்று பேசப்படுவனயாவும் ஞானம் எய்துதற்குக் காரணமாகும். உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோக மென்ற மூன்றிற்கும் இறைவனுலகி லிருத்தல், உடனிருத்தல், திருவடிவுபெறலென்ற நிலைகள்பயனும். ஞானமாவது, சிவாகம ஞானம், திருவருண் ஞானமென இருவகைப்படும். ஒன்று அபர ஞானம், மற்றொன்று பரஞானம்.

**சிவப்பிரகாசம்.**

உ

குருபாதம்

# சைவத்திருமுறைகள்

(தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர்,
வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்)

(337-ம் பக்கத் தொடர்ச்சி)

## 4. கோயிற்றிறம்

நான்காவதாக 'ஆரூர்' 'தில்லை' 'காட்டூர்' என்ற மூன்று பதிகங்களால் இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோவில்களின் பெயர்களைச் சிறப்பாகத்தொகுத்து மூவர் பெருமக்கள் முறை கூறியுள்ளார்கள். எங்கும் நிறைந்துள்ள இறைவனுக்குக் கோவிலொன்று தனியே கூறவேண்டுமோ வெனில்? ஆம் வேண்டும். ஒரு பசுவின் உடம்பெல்லாம் பால் நிறைந்திருப்பினும், அது முனைத்துத் தோன்றுமிடம் அதன் மடியாகுமாப்போல், எங்கும் நிறைந்த இறைவன் ஆண்டாண்டு வழிபடும் அடியார்க்கு அருள்புரிய வேண்டித் திருக்கோவில்கள் தோறும் அர்ச்சனை மூர்த்தியாக எழுந்தருளியுள்ளான். அவன் நினைப்பவர் மனம் கோவிலாகவுங் கொள்வன். இறைவனை உள்ளக் கோவிலில் இருத்தும் ஆற்றல் திருக்கோவில் வழிபாட்டாலேயே கைகூடும். குறிகளும், அடையாளமும், கோவிலும் மக்களுக்கு இறைவனை துணர்வை ஊட்டுதற்கே ஆன்றோரால் வகுக்கப்பட்டன. உலக வாழ்வில் ஈடுபட்டு மயங்கிக் கிடக்கும் மக்களுக்கு, வீடுகளில் உள்ளம் ஒன்றி இறைவனை வழிபட இயலாது. திருக்கோயில் புனிதமான இடமாதலால், அங்குச் சென்றலே மனத்தூய்மையும், மன அடக்கமும் உண்டாகி இறையுணர்வுண்டாகும். ஆதலால் இறைவழிபாடியற்றுவோர் குருவருளை வேண்டித் திருநீ றணிந்து, ஐந்தெழுத்தை ஓதித் தாம் விரும்புந் திருக்கோயிலை

மனதில் நினைந்து, அதில் உள்ளத்தைப் படியவைத்தல் வேண்டும். மற்றும் சிவபெருமான் ஆங்காங்கே அடியார்க்கு அருள்புரிய எழுந்தருளியுள்ள எல்லாத் திருப்பதிகளுமடங்கிய மேற்கூறிய மூன்று பதிகங்களையும் ஓதுதல் இன்றியமையாததாகும்.

## 5. சிவனுருவம்

ஐந்தாவதாகச் சிவனுருவம் என்பது பற்றி 'ஒருரு' 'வரிய' 'பாளை' 'வடிவேறு' 'மருவார்' என்ற ஐந்து பதிகங்கள் அமைந்துள்ளன. சிவ வழிபாடு செய்யப் புகுவார், அவ்விறைவனுடைய திருவுருவை முன்வைத்தும், கண்டும், நினைந்தும் வழிபடுதல் இன்றியமையாததாகும். உருவவழிபாடே மனத்தை ஒருவழிப் படுத்துதற்கு ஏற்ற சாதனமென்ப. அத்திருவுருவின் தோற்றத்தைப் பற்றி ஆசிரியர்கள் நமக்கு விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்கள். அத்திருவுருவை மனதில் இருத்துதல் வேண்டும். அத்தோற்றத்தைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

சிவபெருமான் ஐந்தொழில் அருள் நடம் புரிபவராயினும், குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம்போல் மேனியும், பால்வெண்ணீறும், எடுத்த பொற்பாதமும், என்று வந்தா யென்னுந் திருக்குறிப்பும், காளகண்டமும், கண்ணொரு மூன்றும், கங்கையும் மதியும் தங்கிய முடியும், மழுவுஞ் சூலமும் மான்மறியும் தீயும் உடுக்கையும் திகழுங் கைகளும், அரவக்கச்சும், அணிபணிகங்கணமும், அரைக்கசைத்த புலியதளும், கரியுரிபோர்வையும், உடையாராய் நீலமேனி வாலிழை பாகத்தராய்ப் பூதகணம் புடைசூழப் பெரிய விடைமேல் எழுந்தருளிவருவார்.

## 6. திருவடிப் பெருமை

ஆறாவதாகப் 'பொடியுடை' 'அரவனை' 'அந்தணாளன்' என்ற மூன்று திருப்பதிகங்களும் இறைவன் திருவடிப் பெருமைகளைக் கூறுவனவாக அமைந்துள்ளன. இறைவன் திருவடியே கூற்றை உதைத்ததும், உதைக்கின்றதும், உதைப்பதுமாயிருப்பது. அத்திருவடியே பல்லுயிர்ப்பாவை அழகுற நடிக்கத் திருநடனம் புரிவது. அதுவே உண்மை ஞானத்தை நல்குவது. அஞ்ஞானத்தை அழிக்கவல்லது. அரக்கனது ஆற்றல் அழித்தது. அழகு எழுதலாகா அருட் சேவடி அது; முந்தாகி முன்னே முளைத்த அடி; சார்ந்தார்கட்கெல்லாம் சரணாய அடி. அத்திருவடிகளே பேரின்ப வீட்டை அளிக்கவல்லது. காரைக்காலம்மையார் அத்தன் ஆலங்காடனைப் பார்த்து "அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழிருக்க அருளவேண்டும்" என்று கேட்டார். "ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே" என்றார் அப்பர் பெருமான். வானோர் இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி, நனைந்த திருவடி அது. திருமாலும் பன்றியாய்ச் சென்றிருந்துங் காண்பரிய சேவடி அதுவே. அத்திருவடிகளை நாம் அன்புக்கயிற்றால் சிக்கெனப் பிணித்து, அணிமலரிட்டு அகங்கரைந்து வழிபட வேண்டும். அத்திருவடிப்பேறே பேரின்ப முத்தியாகும்.

## 7. அருச்சனை

ஏழாவதாக அமைந்த 'பந்து' 'வேற்று' 'கொன்று' என்ற மூன்று திருப்பதிகங்களும் அருச்சனை பற்றியதாகும். அகத்தும் புறத்துங் கோயில் கொண்டுள்ள இறைவன் திருவுருவையும் திருவடிகளையுங் கண்டபின் மலர் தூவி வழிபடுதலே செயற்பாலது. இறைவழிபாடியற்றும்போது, இறைவனுடைய அளவில்லாத

அருங் குணங்களைப் புகழ்ந்து, 'போற்றி' என வருந் திருமுறைப் பாடல்களை ஓதி மலர் தூவவேண்டும். முதல்வன் திருவடிகளை வழுத்தி மலர்தூவி வணங்குவ தெல்லாம், நம் நன்மையின் பொருட்டேயன்றி அவ் விறைவன் பொருட்டன்று. இக்கருத்தை மணிவாசகப் பெருமான் திருவாசகத்துள்:—

> "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனமின்பால்
> தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி"

எனத் தெளிவுபடுத்தியிருத்தல் காண்க.

## 8. அடிமை

எட்டாவதாக 'வேயுறு' 'குலம்' 'தில்லை' என்ற மூன்று திருப்பதிகங்களும் அடிமையின் திறத்தைப் புலப்படுத்துவனவா யமைந்துள்ளன. அடிமை எனினும் தொண்டு எனினும் ஒக்கும். ஆண்டானாகிய இறைவன் திருவடியினிடத்தே புகலடைந்து, உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் அவனிடத்தே ஒப்புவித்தவன் அடியவன் ஆவான். அங்ஙனமே இறைவனுக்குத் தொண்டு செய்பவன் தொண்டன் எனப்படுவான். வழிபாட்டின் முடிவில் நாம் இறைவனின் அடிமை, அவனுடைய தொண்டன், என்கடன் பணி செய்து கிடப்பதே, அவன் கடன் அடியேனையுந் தாங்குதல், என்ற உணர்வுடன், சிந்தனை அவன்றனுக்காக்கி, கண்ணினை அவன் பாதப் போதுங்காக்கி, வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்கு அவன் மணிவார்த்தைக் காக்கி, ஒன்றிய உணர்வுடன் கைகூப்பித்தொழுது விழுந்து வணங்குதலே செய்யக் கடவதாம். வாயானும் மனத்தானும், மனத்துள் நின்ற கருத்தானும் கருத் தறிந்து முடிப்பவனுமாகிய சிவபெருமான் வேண்டி யார்க்கு வேண்டியாங்கு அருள்புரிவார்.

இக்காலத்தவர் திருமுறைகளின் சாரமாகிய அகத் தியர் தேவாரத் திரட்டான, 'தோடு' முதல் 'தில்லை

வாழ் அந்தணர்தம்' என்ற பதிகம் ஈறான இருபத்தைந்து பதிகங்களையும் ஓதலாம். அது முடியாவிட்டால் அப்பதிகங்களில் முதல் இறுதிப் பாடல்களையாவது ஓதுதல் வேண்டும். அதற்கும் நேரமில்லாதவர்கள் அவ்விருபத்தைந்து பாடல்களையாவது பாராயணஞ் செய்யலாம்.

ஒவ்வொருவரும் வேதமாகிய சைவத் திருமுறைகளைக் காதலாகிக் கசிந்து, கண்ணீர்மல்க ஓதவேண்டும். அங்ஙனம் ஓதுவதால் பக்தியுணர்ச்சியும் அவ்வுணர்ச்சியின் பயனாகத் தொண்டு செய்யும் ஆற்றலும், அத்தொண்டின் பயனாக இறைவன் திருவடிப்பேறும் உண்டாகும். ஒருவன் எவ்வளவு கற்றிருந்தாலும், அவன் தன்னைப் படைத்த இறைவனிடம் அன்பு செலுத்தி வழிபடாதிருப்பானாயின், அவன் கற்ற கல்வியாலாய பயன் ஒன்றுமில்லை. இக்கருத்தையே வள்ளுவ பெருமான் உலகம் போற்றும் ஒப்பற்ற நீதிநூலாகிய திருக்குறளில் "கற்றதனா லாய பயனென்கொல்? வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" எனக்கூறியுள்ளார். மற்றும் திருக்கயிலாய பரம்பரைத் திருக் தருமபுர ஆதீனத்தின் முதற் குருவாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் தாமியற்றிய சிவபோக சாரம் 128-ம் செய்யுளில் "கற்கவிடர்ப் பட்டுரிகக் கற்றவெல்லாங் கற்றவர்பால், தர்க்கமிட்டு நாய்போலச் சள்ளெனவோ- நற்கருணை, வெள்ள மடங்கும் விரிசடையார்க் காளாகி, உள்ளம் அடங்க அல்லவோ" என, கற்றும் சிவபெருமானுக்காளாகி உள்ளம் அடங்கிப் பேரின்பப் பெருவாழ்வு பெறாது அலையும் மடவோரைப் பார்த்து இழித்துக்கூறியது காண்க.

ஒருவன் பிறந்து அறிவு பெற்றதிலிருந்து காலையில் எழுந்து இரவில் உறங்கப்போகும் வரை நமக்கும் பிறர்க்கும் பயன்படக் கூடிய நற்கருமம் என்ன புரிந்தோம் என்று சிந்தனை செய்து பார்த்தல் வேண்டும்.

ஒருவன் வாழ்வு நன்னெறியிற் செல்லவேண்டுமானல் அவன் சமயவாழ்வை மேற்கொள்ள வேண்டும். அங்ஙனம் நடப்போன் யான் எனது என்னும் செருக்கற்று, எல்லாம் அவன் செயலாகக்கண்டு, மகிழ்ந்து, வானோர்க்கும் கிட்டுவதற்கரிய உயர்ந்த பதவியை அடைவார். இதனை தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகள்

ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித்து இருந்தாலும்—மாதேவா
நின்செயலே என்று நினது அருளாலே உணரில்
என்செயலே காண்கிலேனே.

என சிவபோகசாரத்தில், அருளியிருத்தல் காண்க.

சினம், காமம், பொய் ஆகிய வற்றை ஒழித்து, முன்னர்த் திருமுறை யோதும் வகையிற் குறித்தபடி, காலையிலெழுந்து இறைவழிபாடியற்றிக் திருமுறைகளை இயன்றவரையில் ஓதிவரவேண்டும். அதனோடு அத்திருமுறைகளுட் கண்ட குரு, லிங்க, சங்கம பத்தியில் ஏதேனும் ஒன்றை மேற்கொண்டு, அதினின்றும் வழுவாமல், உண்மையுடனும், ஊக்கத்துடனும், உறுதியுடனும் நடப்போமாயின், நாம் திருமுறைகளை ஓதுவதாலாய பயனைப்பெறலாம். பெரியபுராணத்துட் காணப்பட்ட, உண்மையும், உறுதியும், ஊக்கமும், தூய்மையும் வாய்ந்த சிவனடியார்களின் திருத்தொண்டுகளை நாமும் பின்பற்றுவோமாக.

குருபாதம்

# கந்தரலங்காரப் பொருட்சிறப்பு

(திரு. S. சிவபாதசுந்தரம் அவர்கள், B. A., யாழ்ப்பாணம்.)

(341-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவருட் பேற்றுக்கு மூன்று படிகள் உள்ளன. அவை பசுத் தீவினைகளை விடுதலும், பசு நல்வினைகளையே செய்தலும், இவற்றின் பயனைச் சிவ வினையிலேயே விருப்புண்டாக பசுத்தீவினையைப் போலவே பசு நல்வினையையுங் கைவிட்டு இரண்டையும் ஒப்பாகக் கொள்ளும் பசுவினை யொப்புமாம். பசுவினை யொப்பு உண்டாகத் திருவருளாலே சத்திநிபாதம் ஆகும். இதுவே ஆன்மாவைச் சிவ புண்ணியத்திற் செலுத்தி இறுதியில் ஞான நிலையை அடைவிக்கும். இவற்றுள் தீய ஆசைகள் உடம்பின் வழியாகவே எழுகின்றன. இந்த உடம்பிலே கிளர்ச்சி உண்டாதற்காகக் கள்ளையும், ஊனையும் உண்கின்றோம். உடம்பு நோவாமல் வாழ்தற்காகப் பிறர் பொருளைக் கவர்கின்றோம். அதிலுண்டாகும் தாகத்தினாலே பிறபாலாரிற் காதல் கொள்கின்றோம். எம்மை மறந்து அதையே பொருளென்றெண்ணுதலே இத்தீய ஆசைகளுக்கு மூலமாம். நாமே பொருள் என்பதையும் உடம்பு பொருளன்று என்பதையும் உணர்ந்தால் எம்மை நரகத்துக் காளாக்கி உடம்பின் சுகியைப் பேணமாட்டோம். இந்த உடம்பின் இயல்பையும் இதற்கும் எமக்குமுள்ள தொடர்பையும் எமக்கு என்றும் இணையற்ற துணையான பொருளையும் பின்வரும் பாடலிலே காணலாம்:—

> தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
> காலால் எழுப்பி வளைமுது கோட்டிக்கை நாற்றிநரம்
> பாலார்க்கை இட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம், பிரிந்தால்,
> வேலாற் கிரிதுளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே.

இவற்றை நாம் ஆழமாகச் சிந்தித்தால் தீய ஆசைகள் எழமாட்டா. நாம் ஆசைப்படும் பொருள்களைப் பெறு

தற்கு முயலும்போது அதற்குத் தடைசெய்வோரிடம் கோபமுண்டாகின்றது; ஆசை வலிகுறைந்தால், தடுப்போரிலே கோபம் எழுதல் அரிது.

நல்வினைகள் யாவும் தானம் என்பதில் அடங்கும். பசித்தோர்க்கு அன்னம் கொடுத்தலும், அறியாதார்க்கு அறிவைக் கொடுத்தலும், *வருந்துவோர்க்கு இன்சொல் உரைத்தலும், வருத்தத்தைத் தணிப்பன வற்றைச் செய்தலும், பிறர் செய்யுந் தீவினைகளைப் பொறுத்தலும் இவைபோல்வன பிறவும் அடங்கும்.

இங்ஙனம் "அராப்புனை வேணியன் சேயருளைப்" பெற்றபின் செய்யத்தக்கவைகள் பின்வரும் பாடலில் உள்ளன:—

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில் வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை
[சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே.

இப்பாடலில் சொல்லிய சாதனங்களுள், கடவுளைச் சிந்தித்தலும், சேவித்தலும் சரியை ஒழுக்கமென்றும், அவருடைய திருவடிகளை வந்தித்தலும் வாழ்த்தலும் கிரியை ஒழுக்கமென்றும், அவரைச் சந்தித்தல் யோக ஒழுக்கமென்றும், பொய்யை நிந்தித்து உண்மை சாதித்தல் ஞானநிலை யென்றும் கொள்ளுதல் பொருந்தும். இவற்றுள் யோக ஒழுக்கம் பலவாறாகக் கொள்ளப் படுகின்றது. சிவயோகத்துக்கும் போலியோகத்துக்கும் உள்ள வேற்றுமை பின்வரும் பாடலில் உள்ளது:—

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி உடம்பை ஒறுக்கி லென்னாம் சிவயோகமெனும்
குருத்தை அறிந்து முகமா றுடைக் குருநாதன் சொன்ன
கருத்தை மனத்தில் இருத்துங் கண்டீர் முத்தி கைகண்டதே.

---

* இதில் வாய்மை அடங்கும்.

உடம்பை வருத்தி மூச்சை அடக்குதல் வீண்யோகம் என்பதும், கிரியை ஒழுக்கத்தின் இறுதிப்படியாகிய கிரியையில் ஞானத்தினின்றும் தோன்றும் குருத்தே சிவயோக மென்பதும் இப்பாடலால் அறியக் கிடக்கின்றன.

சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய மார்க்கங்களுள் ஒன்றையும் அநுசரிக்கமாட்டாதவர்கள் போலத் தோன்றுவோர் *உலகத்திலே சுகமாக வாழ விரும்பினல், அதற்கு யாதாயினும் வழியுண்டோ என்பதற்கு விடை பின்வரும் பாடலில் உள்ளது:—

நாளென்செயும் வினைதானென்செயும் எனை நாடிவந்த
கோளென்செயுங் கொடுங் கூற்றென்செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையும் சண்முகமும்
தோளுங் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே.

குமரேசர் முன்னே வந்து தோன்றுதலாவது இப்பாடலிலே கூறப்பட்ட அவருடைய திருவடிவத்தைப் பேரன்போடு சிந்தித்தலாம். அவரிலே அன்பு செல்லுமாயின் அங்ஙனம் செல்லும்போது துன்பமொன்றும் தோன்றாது. §சண்டேசர் சிவபூசை செய்தபோது

* பெரிய புராணத்திலே சொல்லப்பட்ட அடியார்களுட் பெரும்பாலார் இவற்றுள் எதையாயினும் வெளிப்படையாய் அநுசரித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இவற்றுட் சிலவற்றையேனும் முற்பிறவிகளில் அநுட்டித்து அவற்றின் இறுதிப் பகுதிகளை இப்பிறவியில் அநுட்டித்தார்கள் போலும். அவர்களைப் போன்றவர்கள் இக்காலத்தும் இருத்தல் கூடும். அவர்கள் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் குமரக் கடவுளை சிந்தித்து வினைப்பயன்களாலே தாக்கப்படாமல் வாழுதல் கூடும்.

§ உலகத் தொழில்களை மிகுந்த ஆவலோடு செய்பவருக்குப் பசி, தாகம், நித்திரை முதலியவைகள் தோன்றாதிருத்தலை நாமெல்லோரும் நேரே கண்டிருக்கின்றோமல்லவா! கடவுளிலே உண்மையான பற்றுடையவர்களை வினைகள் தாக்கமாட்டா என்பது "கர்மமானது கோடி முன்னே செய்தாலும் நின் கருணைப் பிரவாக அருளைத் தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ" என்னும் தாயுமானவர் திருவாக்கிலுமுள்ளது.

அவருடைய தந்தையார் அவரை அடித்ததை அவர் அறியாததுபோல. ஆதலால், குமரேசரை இடையறு மற் சிந்தித்தால் ஒருவகையான துன்பமும் அநுப விக்கப்படா தொழியும் என்பது பெறப்படும். அவரை இடையறுமற் சிந்திக்கில், உலக வாழ்க்கைக்கு வேண் டிய தொழில்களைச் செய்தல் பொருந்தாதே யெனில் அப்படியன்று. எங்களுடைய மனம் அகக் கூறு, புறக்கூறு என இருகூறுகளை உடையது. புறக்கூறாவது நாம் விழித்திருக்கும்போது நாம் விரும்பியபடி வெளிப் படையான தொழில்களைச்செய்யுங்கூறு. அகக் கூறாவது கனவிலும், நாம் விரும்பாதவற்றை விழிப்பிலும் செய் வது. அகக்கூறு புறக்கூற்றிலும் கோடிமடங்குபெரியது. எமது ஆசைகளுள் வலியவைகள் அகக்கூற்றிலே மாறி மாறி முயன்று கொண்டிருக்கும். ஒருத்தி தனக்குக் கண் மணி போன்றிருந்த பிள்ளையைச் சாகக் கொடுத்தாளா யின், சிலகாலத்துக்கு அப்பிள்ளையைப் பற்றிய எண் ணம் அவளுடைய அகக்கூற்றை நிறைத்துக் கொண் டிருக்கும். அவள் பிறரோடு பிற விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது தன் பிள்ளையைப் பற்றிய பேச்சைத் தொடர்பின்றிப் புகுத்தி விடுவாள். இது போலக் குமரேசரிலே மிகுந்த பற்றுடையவர்களுடைய மனத்தின் அகக்கூறு எப்பொழுதும் அவருடைய எண்ணத்தால் நிறைந்திருக்கும். அவர்களுடைய புறக் கூறு பிறதொழில்களிலே முயலுதற்கு அது தடையா காது. அத்துணைக் குமரேசப் பற்றுடையவர்கள் வினைகளாலே தாக்கப் படாமல் "என்றும் இன்பம் தழைக்க" இருந்து முத்தியடைந்து பேரின்பத்தைப் பெறுவர்.

இவ்வாறு இப்பிரபந்தம் சைவ வாய்மைகளைத் தெளிவாக விளக்கிக் கற்போரை மெய் வழியிற் செலுத் துதற்குக் கருவியாகின்றது. இதன் நோக்கம் கந்த ருடைய சிறப்புகளைச் சொல்லி மகிழ்ந்து அன்பு பாராட்டலாம்.

---

உ

குருபாதம்

அப்பர் தேவாரத்திற்கண்ட

# திருவிளையாடல் பகுதி

(திரு. வேலாயுத ஓதுவார் அவர்கள், தருமபுர ஆதீன
பாடசாலை தேவார ஆசிரியர்)

மின்காட்டுங் கொடிமருங்கு லுமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கையான் காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவிற் றிருப்புத்தூரில்
திருத்தளியான்காண் அவன் என் சிந்தையானே.

திருப்புத்தூர் பாண்டி வளநாட்டின்கண் உள்ள தலங்களுள் மிகப் புராதனமானதும் சமயகுரவர்களால் பாடல் பெற்றதும் ஆகிய சிறப்புடையது. முல்லையும் குறிஞ்சியுஞ் சார்ந்து விளங்குவது. நீர்நிறைந்த ஏரிகள் பல மிகத் தெளிந்தனவாய், கால்வாய்களின் வழியே மணந்தருமலர்கள் பலவற்றையு மூந்திச் சென்று கழனிகளிற் பாய்ந்த வளப்ப மிகுதியினும், மிகச் செழித் தோங்கிய நெற்பயிர்களோடு இடையிடையே தாமரை ஆம்பல் குவளை முதலியன விராவித் தோன்றுவது; பசியமேனியொடும் மகளிர் பலர் தாமரையாகிய முகமும், ஆம்பலாகிய வாயும், குவளைகளாகிய கண்களும் கொண்டு அசைந்தாடும் நடன மாதர்களை ஒத்தனவாகக் காணப் பட்டன.

அப்பால் திங்கள் தங்கித் திளைத்துச் செல்லும் வானளாவிய பல தருக்கள் செறிந்த சோலையின்கண் மயில், குயில் முதலியன ஆடியும், பாடியும், ஓடி விளை யாடியும் அழகு செய்துகொண்டிருந்தன. அதன் நடுவே செறிந்து நிறைந்த கொன்றை மரங்கள் தமது நீண்ட கனிகளைத் தொங்கவிட்டனவாய்ப் பொன்போலும் மலர்

கனைக் காட்ட அதன் நிழ்ச் சுனைப்படுகரில் மிகச் செழித்து விளங்கிய காந்தள், பொன் கொடுக்கும் வள்ளலைக் காட்டுவான் போன்று தமது அழகிய மலர்க் கரங்களை நீட்டிக் காட்டா நிற்க, இதைக் கண்டு பொன் பெற விரும்பிப் பாடும் இசை வாணர்களை ஒப்பத் தேனுண்டு திளைத்த வரிவண்டுகள் இசைபாடிக் காட்சி அளித்தன. இவ்வண்ணம் அழகு தங்கிய சோலைகளின் நடுவில் இத்தலம் விளங்குவதாகும். இச் சிறப்பையே,

> "பாங்கு நல்ல வரிவண்டு இசைபாடத்
> தேங்கொள் கொன்றை திளைக்குந் திருப்புத்தூர்"

எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியுள்ளார். இந் நகரின் நடுவே மிக விசாலமாகிய சுற்றுலைகளோடு, சங்கத்தை வாயினிடத்து வைத்து ஊதுவது போன்ற அழகிய சிறு சிறு பூதங்களையும், பல இடபங்களையும் தன்மேற்றாங்கியவைகளாய், நாற் புறமும் விண்ணை யளாவும் மதில்கள் சூழ்ந்து அழகிய கோபுரவாயில்க ளோடும், புத்தூர்ப் பெருமானாரது ஆலயம் திகழ்ந்து விளங்குகிறது.

இவ்வகை வளப்பங்களையுங் காட்சிகளையுங் கண்டு உள்ள மகிழ்வோடு சென்ற அப்பரடிகள் கைகளுந் தலைமீதேறக் கண்களில் ஆனந்த நீர் பொழிய ஆல யத்தினுள்ளே சென்று வலமாக வந்து திருமுன் வீழ்ந்திறைஞ்சிப் பாடுவாராயினர். அப்போது அவர் கண்ட காட்சி அடுத்துத் தாம் சென்று வணங்கும் ஆலவாயுறை அண்ணலாரது அருட்டன்மை உள்ளத் தெழுதலால் தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளை யாடலை நினைப்பிக்கின்றது.

திருவிளையாடல் சரிதம் வருமாறு:—

மதுரையில் அரசாண்டு வந்த சண்பகமாறன் என்னும் அரசன் வசந்தகாலத்தில் ஓர்நாள் தமது மனைவியாரோடு சண்பகவனஞ் சென்று சந்திரகாந்தக்

குன்றின்மீது அமர்ந்திருந்தான். அவ்வமயம் குழவித் தென்றல் நறுமணங் கமழுஞ் சண்பகச் சோலையுட் புகுந்து மெல்லென வீசக்கண்டு, இம்மணம் நுகர்ந்து அனுபவித்திராத புதியதொரு நறுமணம் ஈதாமென்று வியந்து, பாண்டியன் "எம்மனங் கவர் இந்நன்மணம் யாதாம்" எனப் பலவாறு சிந்தித்து, முடிவில் தம் தேவியாரது கூந்தலிலிருந்தே வருகின்றதென வுணர்ந்தான். பின்னர் இம் மணம் கூந்தலுக்கு இயற்கையோ? செயற்கையோ? என ஐயுற்று, இவ்வுண்மையைத் தெளிய மொழிவார்க்குப் பரிசிலாக அளிக்கப்படும் என ஒரு பொற்கிழியைச் சங்கப் புலவர்களது அவைக் களத்தே தூக்கினான். அச்சங்கப் புலவர்களாலும், ஏனையோர்களாலும் மன்னனுள்ளத்து ஐயப்பாட்டினை நீக்கமுடியவில்லை. சொக்கேசரது திருவடி மறவாத பான்மையராய் வேதாகமங்களை யோதியுணர்ந்து மிக ஏழையாக பிரமசாரிய நிலையிலேயே இருந்தபடியால் பெருமானுக்குப் பூசனைசெய்ய உரிமையின்றி வருந்திய ஆதிசைவராகிய தருமி என்பார் சுவாமி சந்நிதியிலே சென்று விண்ணப்பித்து எப்படியேனும் அடியேனுக்கு அப்பொற்கிழி கிடைக்கும்படி, திருவருள் செய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்தார். பெருமானும் அவர் அன்புக்கிரங்கி,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீ யறியும் பூவே"

என்ற செய்யுளை வரைந்து கொடுத்துப் பொற்கிழியையும் பெறுவாயென்றருளினர். தருமியும் அவ்வண்ணமே புலவர்களிடம் கொடுக்க அச் செய்யுளை நோக்கிப் புலவர்களும் அரசனுக் குணர்த்த, அரசனும் அதுகண்டு மிக்க பேருவகையடைந்து அக்கிழியைத் தருமிக்கே அளிக்கவென உத்தரவு செய்தனன். தருமியும் பெரு மகிழ்ச்சியோடு பொன் முடிப்பைப் பெறுவான்

விரும்பி அவைக்களத்தேற, நக்கீரர் எழுந்து "நில்; இக்கவி பொருட்குற்றமுடைத்து" எனத் தடுத்தனர். தருமியும் பெரிதும் வருந்தினவனாய், பெருமானுடைய சந்நிதியிலே சென்று "பிழையுள்ள பாசுரத்தை யளித்து என்னை ஏமாற்றினீர்; அந்தோ, எனக்கென்ன, ஆ! அப்புலவர் பேசும் அத்தனையும் உமது கடவுட்டன்மைக்கன்றோ இழுக்காம்" என்று பலவாறு கூறி இரங்கினான். உடனே அடியார்க்கெளியனும் ஆலவாய் அண்ணல் ஓர் புலவர் வடிவுகொண் டருளிச் சங்கப்புலவர் குழாத்துட் புகுந்து, "இக்கவிக்குக் குற்றங் கூறினோன் யாவன்? குற்றம் யாது?" என்றனர். நக்கீரர் எழுந்து "கூந்தலுக்கு இயற்கை மணமில்லை யாதலின், இக்கவி பொருட்குற்ற முளதா" மென்றனர். புலவர் பெருமான் "பத்மினிப் பெண் களின் கூந்தலுக்கு என்னை" என, "ஆம் அதுவும் அவ்வண்ணமே" யென்றனர். "அப்படியாயின் தேவ மகளிரது கூந்தலோ" என, "ஆம் அதுவும் மந்தார மலர்களது மணமே" என்றனர். "ஆயின் நீர் வழிபடும் ஞானப்பூங்கோதை யம்மையாருடைய கூந்தலுக்கும் இயற்கை மணமில்லையோ?" வெனப் பலவாறு விதந்து கூறியும், நக்கீரர் மறுத்தனர். பெருமான் உடனே தமது அனற்கண்ணைச் சற்றே விழித்தருள, நக்கீரரும் பெருமானது நுதல்விழி அனல்வெப்ப மாற்றாராகிப் பொற்றாமரைத் தடாகத்திலே வீழ்ந்து வருந்தினர். பெருமானுந் திருவுருக் கரந்தனர். புலவர்கள் எல்லோரும் சந்நிதியிற் சென்று, சங்கத் தலைவராய நீரனது பிழை பொறுத்துக் கரையேற்றியருள வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். கருணைக் கடலா மெம்மண்ணல் உமா சமேதனாய்த் தோன்றித் தமது அருட்கண்ணால் நோக்கிக் கீரரைக் கரையேற்ற, கீரரும் **கைலைபாதி காளத்திபாதி அந்தாதி, கோபப்பிரசாதம்** முதலியன பாடிப் பிரார்த்தித்தனர். பின்னர் தருமிக்கும் பலவித சன்மானங்களோடு பொற்கிழியளிக்கப் பட்டது.

---

# Tiruneelakanta Nayanar

[Kazhi Siva. Kannuswami Pillai, B. A.,]
(Dharmapuram—Adhina—Vidwan)

## 'I AM THE DEVOTEE OF THE POTTER, TIRUNEELAKANTAR'

—Sundarar.

[The Devas resolved to churn the milky sea and obtain *nectar*, the Elixir of immortality. Vishnu, Brahma, Indra, and others (all except *Siva*, the Lord Supreme) met, took into partnership the Asuras also, adopted the Mount Meru as the churning staff and Snake Vasuki as the churning rope, and with themselves at one end and the Asuras at the other, set to work. Unable to withstand the suffering and pain, Vasuki emitted the deadliest poison, Alakala Visham. The poison began to spread and burn with inexorable fury. The erstwhile white-coloured Vishnu turned black and the Golden-hued Brahma turned smoky-hued. Unable to bear the devouring heat, the Devas cried and prayed to Lord Siva for succour. Siva appeared forthwith, drank the poison but retained it in His throat, and became to be called TIRUNEELAKANTA (He of the Holy Blue Throat). The Blue Throat showed poison indeed, but really showered ambrosia ! ]

In Chidambaram, of **Tillaivazh Anthanar** fame, was born a potter of great renown. He was a devout worshipper of Him who performed the dance of eternal wonder in Tillai, Lord Nataraja. He shunned untruth and led a life of virtue. His sole aim was to be of service to the devotees of Siva. A householder of the highest rectitude, he looked upon the sacred ash, the holy Rudraksha beads, the plaited hair, and the holy Five Letters as the real worldly wealth. He had a peculiar attraction for the Holy Blue Throat (The Tiruneelakantam) of the Lord, as it portrayed the perennial grace of the Lord who swallowed the poison in response to the wailing prayers of the Devas, but actually retained it in His throat to give succour to the whole world. Tiruneelakantam was his Mantram. He stood and swore by that enchanting

word. He came to be known, naturally, Potter Tiruneelakantam.

As a house-holder, he carried on his family profession of potter and cheerfully presented earthen bowls to all devotees of the Lord of Tillai. He was blessed with a wife, who was the chastest of chaste women, and who excelled in beauty even Goddess Lakshmi. What if? Nayanar was in the prime of his youth and for once he stepped into the wiles of youth's indiscretion.

His wife came to know of it and her honour was stung to the quick. On his return from the harlot's house, she sulked. She did not however fail to perform her usual house-hold routine. The only thing she refrained from, was partaking her husband's bed. Nayanar, of course, tried to appease her, used all his persuasions and begged to be excused. He failed. When he attempted to take her in embrace, sharp came her stinging command, "Touch us not, in the name of Tiruneelakantam!"

What did Nayanar hear? Tiruneelakantam! That word of magic, above which he had held nothing more sacred. Yes, that word acted like magic and brought him to his senses. The great soul was whipped into the greatest of resolves. "Touch US not, thou said; yes, no more shall I touch thee or for the matter of that any woman. I shall not even think of them in my heart of hearts" rang forth the greatest of vows that was ever undertaken by any mortal. From that day forward, the two noble souls continued to reside together as husband and wife in the same house, but never gave even the slightest clue to the outside world that they were actually living separate.

The two were in the prime of life; but faithfully did they observe the vow taken in the name of

Tiruneelakantam. Years rolled by. They grew old in age, old in form, and old in their love of the Lord and service to His Devotees. And it pleased the Lord, that their incomparable greatness should forthwith be revealed to the world.

One day, the Lord assumed the garb of a Siva Yogi, complete with a scanty white under cloth, ash-smeared body, holy thread and shaggy hair. With an old earthen begging bowl in his hand, He approached Nayanar's house. Nayanar received Him with all respect, attended to His needs and humbly submitted,

"My Lord! what shall I do for you?"

"We shall entrust this earthen begging bowl to your care. Give it back, when we come for it again. It is a unique one. It has no rival. It purifies everything that gets into it. It is worth more than gold or precious gems and should therefore be guarded with care. Receive this!" Nayanar bowed, received the bowl and secured it in a place he considered the safest. The Siva Yogi took leave and returned to His abode.

Days passed by and months. The Lord willed that the bowl which he entrusted to our Nayanar should disappear and it did. Is He not the one and only supreme power that can give all and take all? He again assumed the garb of the Siva Yogi, visited Nayanar's house, and claimed the bowl. Nayanar hurried in. The bowl was not to be seen. He searched in vain. It was strange! He stood in dismay. "Why delay?" asked the Holy Visitor. Nayanar returned, prayed, and submitted, "Oh Sire with the holy thread! The covetable bowl you had given to me is missing from the place where I deposited it. I have searched everywhere, but I am not able to

find it. Kindly permit me to replace it by a new and better one and bear with me."

**Siva Yogi:** What is it that you say? I demand only the earthen bowl that I entrusted to you. I won't accept anything else even if it were to be made of gold. Bring back the bowl that I entrusted for safe custody!

**Nayanar:** O Immortal Sire! That which was entrusted to me is missing. I have searched for it, but I have not traced it so far. That is why I submit, I shall give a well-made bowl instead, that will last long. But you are not kind enough to accept my offer. Your rejection has stunned me.

**Siva yogi:** What else can you do? You have appropriated to yourself the bowl that I entrusted to you. You pretend that you are innocent. Are you not ashamed? I am not going to leave you alone unless I get back my bowl.

**Nayanar:** No; truly I have not appropriated to myself the bounteous bowl. What shall I do to prove that I have never entertained even the shread of a thought of stealing?

**Siva yogi:** Hold your son by the hand, bathe in a sacred tank and utter the truth!

**Nayanar:** My Lord! I have no son to carry out your kind behest. What else shall I do? Kindly speak!

**Siva Yogi:** Hold your chaste wife by the hand and bathe in the tank, then.

**Nayanar:** Owing to a vow that is already subsisting between myself and my wife, I am not in a position to

hold my wife's hand. If it will suffice, I shall bathe alone and swear solemnly.

**Siva Yogi:** You hard-hearted man! Not only have you not returned what I have given you but you now refuse to take your wife by the hand and swear! I shall present my case before the learned Assembly of the Tillai-Vazh-Anthanar.

So saying, the Lord left and Nayanar followed with a heart full of kindness and not of anger or chagrin.

The Lord appeared before the Assembly and laid his complaint. "This potter has failed to return the bowl I entrusted to him. If he has lost it, as he says, he is not prepared to swear accordingly by holding his wife by the hand and bathing in a tank."

**Assembly:** O Potter! you are a man of rectitude. What is your answer?

**Nayanar:** The bowl which this venerable accuser entrusted to me, declaring it as the most valuable treasure of treasures and which I faithfully secured in a safe place has disappeared. I am not able to trace it. This is the truth.

**Assembly:** If you have actually lost the bowl that was entrusted to your care by this venerable gentleman with the sacred ashes, and if he demands that you shall swear that you have lost it, by the ordeal of bath, holding your wife's hand, it is but proper that you must do so.

**Nayanar:** Even let it be so! I shall carry out your decision to the best of my ability.

So declared Nayanar, as he was not prepared to reveal the reason for not holding his wife by the hand.

With the Siva Yogi, Nayanar repaired to his house, called forth his wife and went to * Tirupuliswaram. There, he took his bamboo walking stick, asked his wife to hold one end of it, held the other end in his hand, and entered into the holy tank in front of the temple.

The sagacious Yogi, however, detected the device and protested. He cried, "Thou art not holding thy wife by her hand!"

No more could Nayanar hold back his life's secret. He revealed the true facts of his case before all present and then plunged into the tank with his wife.

Lo! the aged husband and wife who plunged into the waters of the tank appeared back fully rejuvenated. They looked like a fresh young bridal pair. The Devas showered flowers on them.

By this time, the Siva Yogi has disappeared. High above in the sky, Lord Siva, with His consort Parvathi appeared on the Sacred Bull. Both Nayanar and His chaste wife saw, prayed, and danced in sheer joy. "Great Souls that shine forth as the conquerors of the five senses! Live ye, always with us in the full bloom of rejuvenation!" spake the Dancer of Tillai, who in His supreme act of all-pervading grace, was always pleased to visit the houses of His Devotees and reveal their greatness to the world.

---

* Now Known as Ilamai Akkinar Koil (இளமை யாக்கினார் கோயில்)

# கட்டுரைகள்

| | பக்கஎண். |
|---|---|
| அற்புதத் திருவந்தாதி | 242 |
| ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய் | 200 |
| உலகெலாம் | 280, 304 |
| கந்தரலங்காரப் பொருட்சிறப்பு | 338, 362 |
| கழற்சிங்கநாயனார் | 312 |
| குருஞானசம்பந்தர் | 153, 187 |
| குருபூஜைவிழாவும், சித்தியார்வகுப்பும் | 262 |
| குற்றம்நீக்கிக் குறையொழிக்குந் திருப்பாடல் | 319 |
| சிவபூஜாஸ்தவம் உரைப்பாயிரம் | 123 |
| சிவபோகசாரம் | 354 |
| சிவராத்திரி மகிமை | 117 |
| சிவாகமசீலம் | 2, 95, 129, 163, 197, 231, 295 |
| சைவத்திருமுறைகள் | 207, 255, 285, 308, 334, 356 |
| சைவர் மகாநாடு | 82 |
| சொற்றுணை வேதியன் | 11, 62 |
| சோழன் சரிதம் | 16 |
| ஞானசம்பந்தம் | 55, 100 |
| ஞானமகளார் மார்பணிநன்மணி | 222 |
| தமிழ்மறந்த தலைநகரம் | 28 |
| தலைவன்றாளிற் றலைப்பட்ட நங்கை | 300 |
| திருக்கோயில் மகாநாட்டின் நடவடிக்கைகள் | 37 |
| திருஞானசம்பந்தர் தேவாரம் | 271 |
| திருத்தாண்டகவுரை ("முன்னம் அவனுடைய" என்ற பாடல்) | 235 |
| திருநெறி விளக்கம் | 148 |
| திருப்பதிகவுரை | 6, 59 |
| திருவாசகம் உரை ("புணர்ப்பதொக்க" என்றபாடல்) | 19 |
| திருவிரட்டைமணிமாலை | 20, 69 |
| திருவிளையாடல் பகுதி | 396 |
| திருவுந்தியார் உரைநடை | 32, 79, 111, 141, 179, 259 |
| திருவைந்தெழுத்தின் பெருமை | 24, 76, 113, 144, 182 |

பக்கஎண்.

| | |
|---|---|
| திருவெம்பாவை | 66, 105 |
| தெய்வமணக்குஞ் செய்யுள் | 72, 108, 138 |
| தேவாரப் பண்கள் | 176, 212 |
| தோற்றுவாய் | 1 |
| நமனுல் முனிவுண்பது எற்றுக்கோ? | 324 |
| நால்வர்தந்த தேவாரம் | 277 |
| பத்தித் தனித்தெய்வம் | 133, 166, 205 |
| பிள்ளைகண்ட கள்வன் | 170 |
| பெரியபுராணத் திருப்பாட்டின் பேருரை | 249 |
| பொற்கைப் பாண்டியன் | 214 |
| பொன்னூர் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம் | 326 |
| ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் 10-வது ஆண்டு ஆட்சிவிழா நிகழ்ச்சிமுறை | I |
| முப்பொருள் | 289, 342 |
| Opening Speech | 50 |
| Pauranic Rudra & Vedic Rudra | 268 |
| Saiva Siddhantha - The Ambrosia | 350 |
| Siddhantha Saivam and its Merits | 155 |
| Sivaprakasam | 293 |
| The Four Paths | 44, 87, 124, 159 |
| The Gleanings from Saiva Siddhantha | 90, 190, 225 |
| The Sacred Sports of Siva | 161 |
| Tillai - Vath - Anthamar | 193 |
| Tirumurukarruppadai | 47 |
| Tiruneelakanta Nayanar | 370 |
| Tiruvenkadu Temple | 316 |
| Vedas and Saiva Agamas | 196 |

# கட்டுரையாளர்கள்

## தமிழ்

**திருவாளர்கள்:—**

**வித்துவான். அருணைவடிவேலு முதலியார் அவர்கள்,**
*தமிழாசிரியர், D. R. S. ஸ்கூல், காஞ்சிபுரம்.*

**மு. அருணாசலம் M. A.**
*ஆராய்ச்சியாளர், சென்னை பல்கலைக்கழகம்.*

**வித்துவான். M. ஆறுமுக தேசிகர் அவர்கள்,**
*நூல்நிலையப் பரிசோதகர், தருமபுர ஆதீனம்.*

**வித்துவான். மா. இராசமாணிக்கம் அவர்கள் B. O. L.**
*சென்னை.*

**வித்துவான் சோம. இராமலிங்க தேசிகர் அவர்கள்,**
*தமிழாசிரியர், சென்னை.*

**S. இராமலிங்க ஓதுவார் அவர்கள்,**
*தேவார ஆசிரியர், சிதம்பரம்.*

*"பாலகவி", தருமபுர ஆதீன வித்துவான்,*
**வே. இராமநாதன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை.**

*தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர்,*
**வித்துவான். வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்,**
*தமிழாசிரியர், சென்னை.*

*தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர்,*
**வித்துவான். இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்,**
*தமிழ்விரிவுரையாளர், திருவையாறு.*

*தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர்,*
**வித்துவான். வை. மு. சண்முக தேசிகர் அவர்கள்,**
*தமிழாசிரியர், நாகை.*

**R. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள், சென்னை.**

**பூ. சமரபுரி முதலியார் அவர்கள்,** *தாம்பரம்.*

**S. சிவபாதசுந்தரம் அவர்கள் B. A.** *யாழ்ப்பாணம்.*

**மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள்,**
*தருமபுர ஆதீனச் சைவப்பிரசாரகர்.*

**வித்துவான். G. சுப்பிரமணிய பிள்ளை M. A. B. L.**
*தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.*

**C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A.,**
*பெரியபுராண விரிவுரையாசிரியர், சென்னை.*

போதிக்கவல்லவராவர். இக்கருத்தை அகத்திய முனிவர் மாணாக்கர் பன்னிருவர் என்று கூறப்படுதலான் அறிக.

எனவே மேற்கூறிய இருவகை ஆசிரியர்களாலும் கைவரப்பெற்ற நல்லொழுக்கத்தாலும் கல்வியறிவினாலும் பெறுதற்குரிய பெரும்பயன், உயிர்க்குறுதி பயப்பதாகிய சமயநெறியிற் பிரவேசிக்கும் படிக்கு அருள் புரிந்து, பின்னர் இறைவனது இயல்பையும் உயிரினது இயல்பையும் இடையே தடைசெய்து நிற்கும் பாசத்தினியல்பையும் ஐயமற உணர்த்தவல்ல ஞானநூல்களைப் போதித்து, அதன்வழி இறைபணி நிற்குமாறு செய்து, மீண்டு பிறவாநெறிகாட்டி உய்விக்கவல்ல ஞானாசாரியராகிய அருட்குருவாவர். ஈண்டு எடுத்துக் கொண்டது அவ்வருட்குருவையேயாம்.

உயிர்களின்மேல் வைத்த பெருங் கருணையால் அருட்டிரு மேனிகொண்டு இஞ்ஞானோபதேசத்தை அரி அயன் முதலியோர்க்கும் ஏனைய மாதவக்குழாங்கட்கும் சனகாதி நால்வர்கட்கும் ஆதியில் வேதாகமங்களின்வழி உபதேசித்தருளியது ஊழிதோறோங்கும் ஓங்கலாகிய திருக்கயிலாய மலையில் உமாதேவியாரோடும் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ கண்டருத்திரரேயாம் என்பதையும், இவ்வாறு முதற்கண் இறைவன் உணர்த்திய வழியேதான் இந்நிலவுலகின்கண் உபதேசநெறி நிலவுகின்றது என்பதையும் நமது அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் கூறுமாற்றால் உணர்க. செய்யுள் சுபக்கம் 66-வது

ஆரணம் ஆகமங்கள் அருளினால் உருவுகொண்டு
காரணன் அருளானாகில் கதிப்பவ ரில்லையாகும்
நாரணன் முதலாயுள்ள சுரர்நரர் நாகர்க்கெல்லாம்
சீரணி குருசந்தானச் செய்தியும் சென்றிடாவே.

இதுகாறும் கூறியவாற்றால் பிறவிப் பிணிக்கஞ்சி வீடுபேறெய்த மேலைத்தவத்தால் அவாவுகின்ற உயிர்

களுக்கு அருட்குருவாகிய ஞானசாரியர் இன்றியமை யாது வேண்டப்படுபவரேயாம் என்பதை நம்சமயா சாரியர் நால்வருள்ளும் ஞானச்செல்வ வாதவூரடிகள் பொய்ம்மைப்பொருள் ஈதெனவும் மெய்ம்மைப் பொருள் ஈதெனவும் உள்ளத்தெழுந்த விவேகத்தால் செம்மைப் பொருள்யாதென ஆராயுங்கால், பன்னூலுணர்ந்த கற்றோர் பலரிடத்தும் அளவளாவி அறிந்தனவெல்லாம் உள்ளத்தமைவுறாது ஒழிந்தது என்பதை,

"எண்ணிலாரிடத் தளந் தளந்தறி பொருளெல்லாம்
உண்ணுநீர் விடாய்க்கு உவரிநீர் உண்டவரொப்ப"

என்பதாலும் அகத்தமைவுறாது உயிர்க்குயிராம் அருட் குருபரனையே நாடியிருந்ததும் அக்குருபரனலன்றி இப் பிறவிக்கடலைக் கடந்து முத்திக்கரைசேர்தல் ஓர் புணையு மின்றிக் கருங்கடலைக் கரங்கொண்டு நீந்துவதே ஒக்கும் எனநினைந்து கவன்றனர் என்பதை,

கரவிலாத பேர்அன்பினுக்கு எளிவரும் கருணைக்
குரவனார் அருளன்றி இக்கொடிய வெம்பாசம்
புரையில் கேள்வியாற் கடப்பது புணையினால் அன்றி
உரவுநீர்க் கடல் கரங்கொடு நீந்துவது ஒக்கும்

என்பதாலும் அறியலாம்.

அன்றியும் குமரகுருபர அடிகள் அளவிறந்த கல்வி அறிவோடும் முருகப்பெருமான்பால் அருள்பெற்றும் உண்மைஞானம் கைவர, இவ்வாதீனத்து நான்காவது குருமூர்த்திகளிடத்தில் உபதேசம் பெற்றதாலும் இவர் கள் மேல் பண்டார மும்மணிக்கோவை இயற்றிய வாற்றாலும் அறியலாம். மேலும் இவ்வாதீனத்து எட்டாவது குரு மூர்த்திகளாய் எழுந்தருளி இருந்த அழகிய திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகள் மீது அடியாருள் ஒருவராகிய அழகிய திருச்சிற்றம்பலத் தம்பிரான் இயற்றிய கிளிவிடுதூதில் தனது ஞான சாரியர் தனக்கு உபதேசித்த தன்மையும் தானிருந்த

தன்மையும் கூறி அவ்வுபதேசமொழி தனக்குப் பேருவகைதந்து உள்ளத்தை அமைவுறச்செய்தது என்பதை "காய்ந்த பயிருக்கு மேகமது பாலித்தாற்போல் என்னுயிருக்குச் சொன்னான் ஒருசொல்" என்று கூறிய குறிப்புரையாலும் இனிதுணரலாம்.

மற்றும் இவ்வாதீனத்து ஆதி குருமூர்த்திகளாகிய ஸ்ரீமத் குருஞானசம்பந்த சுவாமிகள் செய்தருளிய சிவபோகசாரம் என்னும் அநுபவநூலில் உபதேசக் கிரமத்தைக் கூறுமிடத்து பல்கோடிப் பிறவியில் அகப்பட்டுத் துயருறும் சீடனை நோக்கி,

இற்றைவரைக் காரணத்தோ டிணங்கினையே
யிற்றைவரைச் சென்ம மெடுத்தனையே-யிற்றைவரைத்
துன்பவெள்ளத் துள்ளே மூழ்ந்தனையே யிதறநல்
இன்பவெள்ளத் துள்ளே யிரு

என்று திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

அளவிறந்த காலமாய் பல்வேறு உடலை யெடுத்தும் பயன்பெறு தொழிந்தாயென்பதும், இவ்வாறு பயன் பெறாது ஒழிந்தகாரணம் அந்தக்கரணங்களோடு கூடிப் புலன்வழியே சென்று சென்று பிராரத்துவம் புசிப்பதோடல்லாமல் ஆகாமியமான புதிய வினைகளைத் தேடித் தேடி அவ்வினைகளால் விளையும் துன்பசாகரத்து உழலுதலே என்பதும், இனிமேலாவது இப் பண்டையூனமெல்லாம் கெடுமாறு இறைவனது திருவருளையே நாடி அவ்விறைவனது திருவடியிற் கூடி பேரின்பவெள்ளத்துள்ளே அமர்ந்திருப்பாயாக என்பதும் இதன்பொருளாம்.

இதுகாறும் அந்தக்கரணங்களோடு கூடி புலன் வழிச் செலவொழிந்து இறைவனது தாளைச் சேர்தலே நிலைபெற்ற பேரின்பமா மென்பதைக் குறிப்பாலும் வெளிப்படையாலும் அறிவித்தலே உபதேச மென்பதையும், இவ்வுபதேசம் வேண்டப்படு மென்பதையும்;

செய்வதற்குரியார் யாரென்பதையும், பெறுதற்குரியார் யாரென்பதையும் ஒருவாறு கூறியவாறாயிற்று.

இனி மேற்கூறிய ஸ்ரீ கண்ட ருத்திரர்பால் உபதேசம் பெற்ற நந்தியெம்பெருமான் முதலாய் ஒருவர்பால் ஒருவராய் உபதேசம்பெற்று வருகின்ற இத் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து 24-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அரசு புரியும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இம்மரபுக்கேற்பச் செய்துவரும் சிவப்பணி சமயப்பணி தமிழ்ப்பணி அன்றியும் பொதுப்பணி பலவாயினும் அணுகுவோர்க்கும் மற்றைய எந்நாட்டவர்க்கும் நல்லதோர் ஆன்மலாபம் விளையும்படி இவ்வாதீனத்து ஆதிமூர்த்திகளது நாமத்தையே நாமமாகச் சூட்டி ஞானசம்பந்தம் என்ற மாத சஞ்சிகை தொடங்கி, திருமுறை பன்னிரண்டின் உண்மைப் பொருள்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் உண்மைப் பொருள்களையும் நல்ல ஆராய்ச்சி முறையில் நல்லறிஞர்களைக் கொண்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் வரையும்படிச் செய்து, அன்பர்கட்கு இரண்டு ஆண்டுகளாய் உதவிவருகின்றார்கள். இப்போது இரண்டாவது ஆண்டு நிறைந்து மூன்றாவது ஆண்டு தொடங்கப் பெறுகிறது. ஆகையால் இதுகாறும் இவ்விதழினைப் பெற்றுப் பயனடைந்துவருவாரும் இனி இழ்விதழினைப் பெறவிரும்பும் அன்பர்களும் இஞ்ஞான சம்பந்தத் தொடர்பால் என்றும் வழிவழி அறம்பொருள் இன்பம் வீடு என்னும்புருஷார்த்தங்கள் நான்கும் நிறம்பப் பெற்று வாழவேண்டுமென எல்லாம் வல்ல அங்கயற்கண்ணிபங்கனும் ஆலவாய்ப் பெருமானது திருவடிக் கமலங்களைச் சிந்திக்கின்றோம்.

உ

குருபாதம்

# சிவஞானபோதமும் அருணந்திசிவாசாரியரும்

(தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான், திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள், அண்ணாமலைநகர்.)

செந்தமிழ் நாடென்றும், செந்தமிழகம் என்றும் நம்மனோர் சிந்தை குளிர்ந்து செம்மாந்து கூறிமகிழும் இச் சீரிய தமிழ்நாடு உய்ய, தமிழ் மக்கள் உய்ய, சைவ நன்மக்கள் வாழ, இற்றைக்கு ஆயிரத்திருநூறு ஆண்டுகட்கு முன் பல்வேறு புதுக் கொள்கைகளால் சீர்குலைந்திருந்த சைவத்துறை, சீர்பெற்றுத் திகழச் சைவத் திருமுறை நூல்கள் தோன்றி நலஞ்செய்தன என்பது உலகறிந்த செய்தியாகும். அத்திருமுறை களையும், அவற்றிற்கு முன்னிருந்த தமிழ்ப் பெருநூல் களையும், தம் மதிநுட்பத்தால் நுண்ணிதின் ஆய்ந்து இற்றைக்குச் சற்றேறக்குறைய அறுநூறு எழுநூறு ஆண்டுகட்குமுன் தோன்றிய மெய்கண்ட தேவர் சிவ ஞானபோத மென்னும் மெய்ந்நூலை ஆக்கித் தந்தன ரென்பது வரலாறு. அவர்காலத்தே அவர்க்கு மாணாக் கராய்ச் சகலாகமபண்டிதர் என்னும் சிறப்பினை யுடையராய் அருணந்தி சிவனார் விளங்கின ரென்பதும், சிவஞானபோதத்துக்கு செந்தமிழ்த் தீஞ்சுவை கனிந்த செய்யுட்களால் அரியவுரை கண்டன ரென்பதும், அவ் வுரை சிவஞான சித்தியார் எனப்படுவ தென்பதும், தமிழ் நலமும், சைவ நலமும், ஒருங்குடைய நன்மக்கள் இனிதறிந்த செய்திகளாகும்.

இவ்வினிய சிவஞான போதத்திற்கு மெய்யுரை கண்ட அருணந்தி சிவனார் தாம் ஓதப்புகுந்த உரை யினை எவ்வண்ணம் ஆராய்ந்துரைக்கின்றா ரென்பதே

ஈண்டையாராய்ச்சிக்குப் பொருளாவது. இவ்வாராய்ச்சியினை வெளியிடுதற்குரிய தமிழ்ச் சமய வெளியீடுகள் அறவே இல்லையாயிருந்த பெருங்குறை யொன்று சமயவுணர்ச்சி மிக்க சான்றோரிடையே மிக்க வருத்தத்தைப் பயந்து நின்றது. ஏனைச் சமயத்தவர் அத்துறையில் முற்பட்டு நின்று சமயப்பணி புரிந்து வருகையில், சைவ நன்மக்களுக்கு இது பெருநாணத்தையே விளைத்து வந்தது. பிறசமயத்தவர்முன் நின்று பேசுதற்கும் வாய்ப்பில்லாது மழுங்கிய சமயநூற் புலவரை நாம் அறிவோம். அவருள்ளமெல்லாம் சமயப்பணி குறித்த வெளியீடுகள் பிறத்தற்கு வேண்டும் விண்ணப்பத்தினை. இறைவன் திருமுன் செய்துகொண்டே வந்தன வேண்டுவோர் வேண்டுவதீயும் முதல்வன், எண்ணியார் எண்ணிய எண்ணம் திண்ணிதாம் பொருட்டு இதுகாறும் அமைந்திருந்து, இப்போது திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தை இப்பணியிற் புகுத்திச் சைவ நலத்தைத் தமிழுலகும் பிறவுலகும் அறிந்து நுகருமாறு செய்கின்றான் என்பது தெள்ளிதாக விளங்குகின்றது. சைவசமயப் பெருநிலையங்களாகிய திருத்தருமபுரம் திருவாவடுதுறை, திருப்பனந்தாள் முதலியன தமிழ்த் திருப்பணியிற் சால்புற்றுத் திகழ்கின்றன. தருமையாதீன முதல்வராகத் தற்போது எழுந்தருளியிருக்கும் பரமாசாரிய சுவாமிகள் "ஞானசம்பந்தம்" என்ற திங்கள் வெளியீட்டால் சமயப்பணி புரிந்தருளுகின்றார்கள். அவர்கள் சென்ற (1943) கோடை விடுமுறையில் சிவஞானசித்தி நினைவுவகுப்பு (Refresher Course) வைத்து நடத்திய தொன்றே, சைவப் பணியின்கண் அவர்கள் மேற்கொண்டிருக்கும் பேரருள் நலத்தைப் புலப்படுத்தும். அப்பரமாசாரிய மூர்த்தியின் அருணலம் பெற்று, இவ்வாராய்ச்சியினை இதன்கண் வெளியிடுகின்றேன். "கேட்டினு முண்டோர் உறுதி கிளைஞரை நீட்டி யளப்பதோர் கோல்" என்பர் திருவள்ளுவத் தேவர். எத்தகைய வெளியீடும் சுணங்குதற் குரியகாலம் இக்காலம். இக்காலத்தும் அத்தகைய சுணக்கம் சிறிது

மின்றித் தங்கள் "ஞானசம்பந்த" மாகிய இவ்வெளியீட்டினை அழகுதிகழச் செய்கின்றார்களென்பதொன்றே சைவசமயத் திருப்பணிக்கண் எங்கள் மகாசந்நிதானம் பேராதரம் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டும். இத்துணையும் மற்றொன்று விரித்தல் போலக் கூறியது இவ்வாராய்ச்சியினை வெளியிடுதற்குத் துணையாகிய ஞானசம்பந்தத் திங்கள் வெளியீட்டின் நலத்தைப் பாராட்டுதற்காகும். இனி ஆராய்ச்சிக்கண் செல்வாம்.

சிவஞானபோதமென்னும் செம்பொருளுண்மை தெளித்துத் திருநெறிப் படுத்தும் தீவிய செந்தமிழ்ப் பெருநூலை நம்மனோர்பால் கொண்ட பேரருட்பெருக்கால் வழங்கலுற்ற மெய்கண்டதேவர் இதன்கண் பன்னிரண்டு சூத்திரங்களால் அறிவுநூல் முடிபெல்லாம் அகப்படத் தொகுத்துச் சுருங்கிய சிலவாய சொற்களால் இனிது விளங்க வுரைத்துள்ளார். இதற்குப் பேருரை வகுத்த எங்கள் மாதவச் சிவஞானயோகிகளின் மாணாக்கருள் ஒருவரான கச்சியப்ப முனிவர்,

> "சிறிய ஆடியில் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்கு
> அறிவு நூல்களின் முடிபெலாம் அகப்படுத் தவற்றின்
> நெறியெலாம் விளக்கிய சிவஞான போதத்தைக்
> குறிசெய்தீந் தமிழாலுரை குரவனைப் பணிவாம்"

என்று தேவரைப் பரவுவது சிவஞானபோதத்தின் முடிபொருளை ஓராற்றால் விளக்கி நிற்பதைக் காணலாம். இதன்கண், சிவஞானபோதத்துக்குச் சிறிய கண்ணாடியும், அறிவு நூல்களின் முடிபுகட்குப் பெரியமால்வரைப் பொருளும் உவமமாக நிறுத்தப்படுகின்றன. உவமமும் பொருளும் ஒத்தல்வேண்டி, ஆடியும் மால்வரைப் பொருளும், உவமமாயினவாயினும், அறிவு நூல்களின் பரந்து விரிந்தேகும் முடிபுகளை நோக்குமிடத்துப் பெரிய மால்வரைப் பொருள் என்று உவமித்தது பொருத்தமாகவேயுளது. அன்றியும், மூன்றடிச் சிறுமையும் நான்கடிப் பெருமையும் கொண்ட பனிரண்டு சூத்திரங்

களாற் சுருங்கச் சொல்லல் முதலாய அழகு திகழ அமைந்த இந்நூற்குச் சிறிய ஆடி உவமமாதல் மிக்க நயமாகவுளது. சூத்திரம் பொருள்விளங்க நிற்கும் இயல்பு கூறுமிடத்து ஆசிரியர் தொல்காப்பியர்,

"அவற்றுள் சூத்திரந்தானே,
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே"(செய். 169)

என்றுகூறி, மரபியலிலும்,

"மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை எய்தி
அளக்க லாகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன் தெரிபுடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்" (மரபு 100)

என்று கூறுகின்றார்.

இவ்விரு சூத்திரத்தாலும் உணர்த்தப்படும் இயல் பனைத்தும் இவ்வரிய சிவஞானபோதத்தின்கண் இனி தமைந்திருப்பது சிவஞான முனிவர் வகுத்துள்ள பேருரையால் யாவரும் அறியத் தோன்றுகிறது. அம் முனிவர் பெருமானே தமது அருமைத் திருவாயால் முகத்தா னமர்ந்து இனிது நோக்கி உரைத்தருளக் கேட்கும் பேறுபெற்ற கச்சியப்ப முனிவர் சிவஞான போதப் பொருணலமும் சூத்திரவமைதியும் நம்மனோ ரினும் சிறக்க வுணர்ந்திருப்பர். அன்றியும், பரந் தாழ்ந்த தமிழ்நூற் புலமை யுடையராதலின், "அறிவு நூல்களின் முடிபெலாம் அகப்படுத்து அவற்றின் நெறியெல்லாம்" விளக்கி நிற்கும் சிவஞானபோதத் தின் சிறப்பை, "சிறிய ஆடியிற் பெரியமால் வரைப் பொருள் செறிந்தாங்கு" என்று உவமம்காட்டி விளக்கினார்.

(வரும்)

உ

திருச்சிற்றம்பலம்

# சிவராஜ்யம்

[பேட்டை, திரு, ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளை அவர்கள்.]

## அரசின் இன்றியமையாமை

உயிர்கள் உள்ளன. அவை பல. அவற்றிற்கு அறிவுண்டு. அது அறுவகைப்படும். ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவு, ஆறறிவு என்பன அவ்வகை. ஓரறிவு பரிசம். ஈரறிவு அதுவும் ரசமுமாம். மூவறிவு அவ்விரண்டுங் கந்தமுமாம். நாலறிவு அம்மூன்றும் ரூபமுமாம். ஐயறிவு அந்நான்கும் சப்தமுமாம். ஆறறிவு அவ்வைந்தும் மனமுமாம். புல், மரம் முதலியவை பரிசமாத்திரமுடையன. இப்பி, சங்குமுதலியவை பரிசத்துடன் ரசமுமுடையன. சிதல், எறும்பு முதலியவை அவ்விரண்டனுடன் கந்தமுமுடையன. தும்பி, வண்டு முதலியவை அம்மூன்றனுடன் ரூபமு முடையன. விலங்கு புள் முதலியவை அந்நான்கனுடன் சப்தமுமுடையன. மனிதர் அவ்வைந்தனுடன் மனமுமுடையவர். பரிசம் எல்லாவுயிர்கட்கு முள்ளது. மற்ற அறிவுகளிற் சில சில அநேக வுயிர்களுக்கிரா. ஆறுமறிவு மனிதருக்கே சொந்தம். அவர் மிருகங்களின் வேறென்பதை அவ்வுண்மை யொன்றே காட்டும். அஃதின்றேல் அவரும் ஆடு மாடுகளேயாவர்.

மனிதர் நன்மை செய்கின்றனர். அவர் தீமை செய்யாமலும் மில்லை. நன்மை குறைவு. தீமையே அதிகம். நன்மை செய்பவர் தொகையுங் குறைவு, தீமை செய்பவர் தொகைமிகுதி. உலகந்தோன்றி நாளிதுவரை எத்தனையோ கோடி வருடங்கள் கழிந்தன. அத்தனை வருடங்களிலும் எத்தனைகோடி மக்கள் தோன்றியிருப்பர்? அவருள் நல்லவர் தொகை அதிகமிருக்குமா? அல்லவர் தொகை அதிகமிருக்குமா? இப்போதுள்ள

மாந்தரை யெடுத்துக் கொள்க. அவருள் நல்லவர் மிகுதியா? அல்லவர் மிகுதியா? அல்லவரே மிக்கிருப்பர். அந்நியாயமே எக்காலத்துக்கும் பொருந்தும். நல்லவ ரல்லாதவரைக் கெட்டவரெனல் யாங்ஙனமென்றொரு வினு நிகழலாம். மனிதர் நன்மை செய்வதற்கே யுரியர். தீமையைச் செய்யுமுரிமை அவருக்கில்லை. அப்படியே நன்மை தீமைகளல்லாத வினைகளைச் செய்து காலங் கழிக்கவும் அவர்க் குரிமை கிடையாது. ஆகலின் நன்மை தீமைகளல்லாத வினைகளுந் தீமையின்பாலே படும். அங்ஙனம் பெரும்பான்மைத் தீமைகளைப் பெரும் பான்மை மாந்தர் செய்யும் மனிதசமூகத்தைத் தீய சமூகமென்றே சொல்லவேண்டும். 'குணநாடிக் குற்றமு நாடி, யவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்' என்றது திருக்குறளும்.

புலி கொல்லும். சிங்கங் கொல்லும். பாம்பு கொல் லும். அப்படியே மனிதனுங் கொல்வான். புலியாதியவற்றி னறிவு என்றும் ஒரேபடித்தா இருக்கும். அதற்கு வளர்ச்சியில்லை. ஆகையால் அவை செய்யுங் கொடுமைகளும் என்றும் ஒரே மாதிரிதானிருக் கும். ஆனல் மனிதரறிவு வளரும். அதனுல் அவர் புதிய புதியவான சூழ்ச்சிகளைக் கண்டுபிடிப்பர். அச்சூழ்ச்சி களில் அகப்பட்டு உயிரை விடுபவர் பலர். செல்வத்தை யிழப்பவர் பலர். மனைவியரைக் கொடுப்பவர் பலர். நாட்டை விட்டோடுபவர் பலர். பதவியை விட்டிறங்கு பவர் பலர். பிறவற்றையும் ஒழிப்பவர் பலர். ஐரோப் பாவிற் பெரும்போர் நடந்து வருகிறது. அதிற் கையாளப்படும் போர்க்கருவிகள் பல. போர்முறைகளும் அப்படியே. அவையெல்லாம் மனிதரின் வளர்ந்த அறிவின் பலன். அவற்ருற் பிரபஞ்சம் அடைந்து வரும் நஷ்டம் அம்மம்ம! அளவிடற் கரியது. அந் நஷ்டத்தைப் புலிகள் செய்யவல்லவா? சிங்கங்கள் செய்ய வல்லவா? வேறு எந்தப்பிராணிகள்தான் செய்ய வல்ல? அவை போகட்டும். அந்நஷ்டத்தை இடிகள்

உண்டாக்குமா? பூகம்பம் உண்டாக்குமா? பெரு வெள்ளம் உண்டாக்குமா? அம்மை பேதி பிளேக் முதலியனதா னுண்டாக்குமா? மாட்டா. ஆகவே மனிதரே மிகக்கொடியர், மிருக முதலியன அவ்வள வில்லை யென்பது காண்க.

மனிதர் வினைகளைச் செய்கின்றனர். மிருகங்களும் வினைகளைச் செய்கின்றன. ஆனால் அச் செயல்களுக்குள் ஒரு முக்கிய வித்தியாச முண்டு. இயற்கையிலேயே சில மிருகங்கள் நல்லன. சில மிருகங்கள் தீயன. ஒரு நன்மை யையோ தீமையையோ ஒரு மிருகம் செய்கிறது. ஆனால் அதைச் செய்யுமுன்னும் செய்கிறபோதும் செய்த பின்னும் அது நன்மை அல்லது தீமையென்று அம் மிருகம் உணர்வதில்லை. அவ்வுணரக் கூடாமை அதன் பிறப்பியற்கை. ஆகையாற்றான் மிருகங்களை நல்வழிப் படுத்துதற்கும் படாதவற்றைத் தண்டித்தற்குமென உலகில் முயற்சியில்லை. ஆனால் மனிதப் பிறப்பின் இயற்கை விசித்திரமானது. நன்மை தீமைகளைச் செய்யு மாந்தர் அவற்றை நன்மையென்றோ தீமையென்றோ எப்போதாவது உணரக்கூடும். அச்சத்தியே அவ்விசித் திரம். நன்மையை நன்மை யென்றுந் தீமையைத் தீமை யென்று முணரக் கூடிய சத்தியையே மனவுணர்வு பகுத்தறிவு என்ப. (வரும்)

---


## திருப் புள்ளிருக்கு வேளூர்த் தலவரலாறு

மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த் தருளவல்லானாகிய இறைவன் வைத்தியநாதர் என்னும் திருப் பெயருடன் எழுந்தருளியிருக்கும் **வைத்தீஸ்வரன் கோயில்** என் னும் புள்ளிருக்கு வேளூர்த் தலத்தின் பெருமையினை அறி விப்பது. பாராயணத்திற்காகச் சிலபாடல்களும் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன. விலை 0–2–0. தபாற்செலவு 0–0–9.

கிடைக்குமிடம்:—

தருமபுர ஆதீன
**நூல்நிலையப் பரிசோதகர்,**
தருமபுரம், மாயவரம்.

**நூல்நிலையப் பரிசோதகர்,**
வேளூர் தேவஸ்தான ஆபீஸ்,
வைத்தீஸ்வரன் கோயில் P. O.

உ

குருபாதம்

# அற்புதத் தராசு

(டாக்டர், A. G. கோமதியம்மாள், கோவில்பட்டி.)

சோழநாட்டிலே பழையாறை என்னும் ஊரிலே அவதரித்தவர் அமர்நீதி நாயனார். வைசிய குலத்தவர். செய்யுந் தொழிலோ சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல், கந்தை, கீள், கோவணம் முதலியன கொடுத்தல். இவ்வாறு செல்வப் பயனைக் கொள்ளும் அந்நாயனார் திருநல்லூரில் திருவிழாவினைக்காணவரும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தற்காக ஆங்கு ஓர் திருமடம் எடுப்பித்தார். சுற்றத்தவர்களோடு சென்று தங்கியிருந்து, வருகின்ற அடியார்களுக்கு மாகேசுவரபூசை செய்வித்து, கோவணம் முதலியன வும் கொடுத்துவந்தார்.

இறைவன் அன்புடைத் தொண்டர்க்கு அருள்பாலிப்பான் வேண்டி, பிராமணகுலத்துப் பிரமச்சரியவடிவு கொண்டு, திருநீறு, மாந்தோல் முதலியன தரித்து, கோவணமும் திருநீற்றுப் பையும் சேர்ந்த ஒரு தண்டினைக் கையிலே பிடித்துக்கொண்டு திருமடத்திற்கு எழுந்தருளினர். அதுகண்ட நாயனர் மனமகிழ்வுடன் எதிர்கொண்டு வணங்கி "தேவரீர் இங்கு எழுந்தருளுவதற்கு அடியேன் முன்செய்த தவம் யாதோ" என்று பலவாருகத் துதித்தனர். பிரமசாரியானவர் "நீவிர் அடியார்களைத் திருவமுது செய்வித்து கோவண முதலியனவும் கொடுப்பதாகக் கேள்வியுற்றோம். ஆதலின் உம்மைக் காண வந்தோம்" என்றனர். கேட்டனர் நாயனர்; உவகை கூர்ந்தார். "இம்மடத்திலமுது செய்

---

சைவப்பெண்ணினல்லாரின் உள்ளெழுச்சியே இக்கட்டுரை. இது போன்று மற்றையோரும் முன்வர ஒரு தூண்டுகோல்.

தருள வேண்டும்" என்றனர். பிரமசாரியும் அதற்கிசைந்து "நாம் காவிரியில் நீராடிவருவோம். ஒரு சமயம் மழை பெய்யினும் பின்னர்த் தரித்துக்கொள்வதற்கு கோவணம் வேண்டும்" எனக்கூறித் தண்டில் கட்டப்பட்டுள்ள கோவணத்தை அவிழ்த்து நாயனர் கையில் கொடுத்தனர். "இது பெருமை மிகுந்தது. நாம் நீராடி வருமளவும் வைத்திரும்" எனச் சொல்லி நீராடச் சென்றனர். நாயனரும் கோவணத்தைத் தகுந்த ஓர் இடத்திலே வைத்தனர்.

நீராடச் சென்ற பிரமசாரியும் நாயனரிடத்தில் கொடுத்துச்சென்ற கோவணத்தை இருந்த இடத்தினின்றும் நீங்கும்படிச்செய்து, தாமும் நீராடி, மழையில் நனைந்து திருமடத்தைச் சார்ந்தார். உடனே நாயனரும் 'அமுது தயாராகிவிட்டது. தேவரீர் உள்ளே எழுந்தருளி அதனை ஏற்றருளல் வேண்டும்' என்று வேண்ட, பிரமசாரியும் "நாம் உம்மிடம் கொடுத்துச் சென்ற கோவணத்தைக் கொண்டு வாரும்; தரித்துக்கொண்டு வருவோம்" என்ற அருளினர். நிகழ்ந்ததை அறியாத நாயனரும் உள்ளே சென்று பார்த்தார். வைத்த இடத்தில் கோவணத்தைக் கண்டிலர். எங்குந் தேடினர். அகப்பட்டிலது; வருத்தங்கொண்டார். வேருெரு கோவணத்துடனே வெளியே வந்தார். அடிபணிந்து வணங்கினர். "அடிகாள்! கோவணத்தை வைத்த இடத்தில் கண்டிலேன். வேருெரு நல்லகோவணம் கொண்டு வந்திருக்கின்றேன். அதை ஏற்றுக்கொண்டு பிழை பொருத்தருள்வீர்" என்று வேண்டினர். அதனைக்கேட்ட பிரமசாரி கோபங் கொண்டவர்போல் "நீர் அடியார்களுக்கு கோவணம் கொடுத்து வருவதாகக் கூறி எனது கோவணத்தைக் கவர்ந்துகொண்டீரே நன்று! நன்று!!" என்றுரைத்தனர். "தாங்கள் கொடுத்த கோவணத்திற்குப் பதிலாக நல்ல பட்டாடைகளையும், பொன், இரத்தினம் முதலியவைகளையும் தருகின்றேன். ஏற்றருளும்" என வேண்டினர் நாயனர்.

இறைவரும் சினம் அடங்கினவர்போல, "[illegible] முதலியன வேண்டாம். இக்கோவணத்திற்கு ஒத்த நிறையுள்ள கோவணம் தந்தாற்போதும்" என்று அருளினர். நாயனார் ஒரு தராசைக் கொண்டுவந்து நாட்டினர். ஓர் தட்டில் அக்கோவணத்தையும் மற்றொரு தட்டில் புதிய கோவணத்தையும் வைத்தனர். தட்டு மேலெழுந்தது. உடனே உள்ளிருந்த கோவணங்கள் யாவற்றையும் கொடுவந்து இட்டனர். சரியாகவில்லை. பட்டாடைகளை எல்லாம் கொண்டுவந்து இட்டார். பின்னரும் தட்டுத் தாழாமையால், பொன், வெள்ளி முதலியவற்றினையும் கொண்டுவந்து இட்டார். தட்டு முன்னிலும் மேலெழுந்தது. நாயனார் பிரமசாரியரை வணங்கி "தேவரீர் கருணை பாலித்தால் நானும் மனைவி மக்களுடன் ஏறுகின்றேன்" என விண்ணப்பிக்க, அவரும் உடன்பட்டனர்.

நாயனார் மனமகிழ்ச்சியோடு மனைவியும் புதல்வனும் பின்வரத் தராசைவலம்வந்து "அடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டில் பிழைத்திலோமெனில் பெருந்துலைநேர் நிற்க" என்று கூறி நல்லூர் இறைவனை உண்ணினைந்து அஞ்செழுத்தோதி தட்டில் ஏறினர். உடனே இறைவரது கோவணமும், கொண்ட அன்பினிற் குறைபடா அடியவர் அடிமைத்தொண்டும் ஒத்தலால் துலையின் இருதட்டுக்களும் ஒத்துநேர்நின்றன. அடிகளாரது பெருமையை யறிந்த மக்கள் யாவரும் வணங்கி நின்றனர். இமையவர் பூமழைபொழிந்தார். இறைவரும் தமது பிரமசாரி வடிவத்தைக் குறைத்து உமாசமேதராய் ஆகாயத்தில் தோன்றிக் காட்சி அளித்து கருணை பாலித்தனர். அம்மூவரும் அந்த அற்புதத்தராசையே விமானமாகக் கொண்டு சிவபுரி அடைந்தனர்.

# Gleanings from Saiva Siddhanta

(Sri R. Shanmukhasundaram Chettiar.)

(Continued from Page 190 of Malar II)

## 4. The Existence and Nature of the Self.

Through the medium of the principle of causality we have endeavoured to find proof of the existence of God Supreme and we proceeded to find it from the known Universe to the unknown God. In finding proof of the existence of the self or soul, we shall have also to proceed from the known body or organism to the unknown soul. To begin with, Sivajnana Munivar employs the following inference which may help us to have the true perspective of the subject.

> **An organism wich has the self is capable of knowing or perceiving things.**
>
> **An organism which has not the self is not capable of knowing or perceiving things.**
>
> **Therefore, the self is alone capable of knowing or perceiving things.**

In the rhythm of life, we find that there are five phases of conscious states. They are waking, dream, deep sleep, Thuriya or subconscious state, and Thuriatheetham or the most subconscious state, and in these states of life, consciousness persists to exist. It is consciousness alone that determines the self in the body. Descartes has for the basis, to find proof of the self, the undeniableness of consciousness. We shall now examine how in the waking state that the consciousness persists through.

The Madhyamikas, one of the four sects of Bhuddists argue that the human organism consists of a body, sense organs, and sensations. If each of these is negatived as non-self,

the state of void, thus achieved, is the self. This process of negation is an intellectual process and it is within the understanding of something. It is an obvious truth that everything known implies a knower. That consciousness which understands even the state of void is therefore the self and to say even this consciousness is void, it resembles a saying that a mother, who begot a child, is barren.

The materialists assume that consciousness springs from the combination of the material elements each of which is severally devoid of consciousness when they are transformed into the shape of a body. Thus according to this theory man is only a body qualified by consciousness, and this consciousness arises in the same way as the red colour is produced out of betel, nut, and lime. It is also urged that when we say that we are growing stout, we are reduced, we are men, we are brahmin, we make reference to our own body and that the self is nothing but the body.

Though we generally say we are growing stout, we are reduced etc., as operations of the self, these functions belong only to the body. We do not say, I am a body, I am an arm, I am a leg, but we express as my body, my arm, my leg, and so forth. When we say my body, we mean two separate entities and one of them belongs to the other. The body belongs to me. Me represents an agent's, and it is therefore evident that the agent is the self and he is in possession of the body.

It is interesting to study Sankara's refutation of this theory of materialists. "One of the considerations which Sankara brings forward against materialism is that the bodily and the mental processes are not organically connected as is evident from the facts of death, and dream. The materialist's conclusion, that the psychological processes are the qualities of the body, is drawn from the fact of their concommittance, but if the former had been organically connected with the

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி ...
தில் திருவாரூர் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வி...
S. தண்டபாணி தேசிகர் அவர்கள் "நக்கீரர்பெற்றநல்ல..."
பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

சீகாழி ஸ்ரீபிரமபுரீசுவர சுவாமி தேவஸ்தான...
மலைநகர் தருமையாதீனத் தமிழ்ப்புலவர் வித்துவான், ...
சு. துரைசாமி பிள்ளை அவர்கள் "முருகாற்றுப்படை..."
பற்றி விரிவுரையாற்றினார்கள்.

மதிப்புரை

## பரிசுபெற்ற தமிழிசைப் பாடல்கள்

உயர்திரு, செட்டிநாட்டரசர் அவர்களின் பேரா... முயற்சியினாலும் இடைப்பட்ட சிறிது காலமாகக் கு...யிருந்த தமிழிசை தற்காலம் மேம்பாடுற்று வருதல் யாவரு...ததே. மேலும் தமிழ்க்கீர்த்தனங்களும் வெளிவர வே... எண்ணினார்கள். அதன்பயனாக எழுந்ததே இந்நூலாகும். திருவாளர்கள், T. லக்ஷ்மண பிள்ளை, மீனாக்ஷிசுந்தரம் ... விசுவநாத சாஸ்திரிகள், கிருஷ்ணமாசாரியார், பாபநாச... ஆகிய ஐவர்கள் இயற்றிய தமிழ்க் கீர்த்தனங்கள் அடங்கிய... அண்ணாமலைப் பல்கலைக்கழக வீணை ஆசிரியர் திரு. V. ... சங்கர ஐயர் அவர்கள் சுரதாளக் குறிப்புகள் அமைத்... கள். செட்டிநாட்டரசர் புகைப்படமும், அக்கழகத் தமிழ்... தலைவர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L., அவர்... ழிசைப் பெருமையினைப் பற்றி எழுதிய கட்டுரையும் நூன்... அழகு செய்கின்றன. தற்கால தமிழிசை உலகிற்கு இ... வெளியீடு ஓர் எடுத்துக்காட்டாகும் என்று கூறலாம்.

கிடைக்குமிடம்:— அண்ணாமலைப் பல்கலைக்க...
அண்ணாமலைநகர்.

...008...


## "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் தமிழ்த் திங்கள் வெளி...

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிரு... வெளிவருவது. சைவசமயச் சார்பாய் எழுதப்படும் தெளிவ... கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் முழு உண்மை... உணர்வதற்கும் தமிழறிவைப் பெறுதற்கும் பெருந்துணை...

### ஆண்டுக் கைபொப்பம்

உள்நாடு (இந்தியா, இலங்கை) அஞ்சற்கூலியுள்பட ரூ. 1—...
வெளிநாடு ... ... ... ... ரூ. 2—...
குறிப்பு:— தனிப்பிரதி கிடையாது. ஓராண்டிற்குக் கு... கையொப்பம் இல்லை.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
ஷண்முகவிலாசம்,
தருமபுரம், மாயவரம்.